[1980 பிப்ரவரி 11]

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : (அ) இல்லை.

(ஆ) கேள்விக்கு இடமில்லை,

திரு, வெ, கருணாமூர்த்தி : பேரவைத் தலைவரவர்களே, அந்தப் பேரூராட்சி அப்படிப்பட்ட தொகை கட்டுவதற்குத் தயாராக இருப்பதாக ஒரு தீர்மானம் போட்டு அனுப்பப்பட்டிருக்கிறது, மேலும் அருகாமையிலே இருக்கின்ற கிராமங்களுக்கும் குடிநீர் வழங்க வேண்டும் என்றும் அது ''ரூரல் ஸ்கீம்'' என்ற அடிப்படையில் எடுத்துக்கொள்ளப்பட வேண்டும் என்ற ஒரு கோரிக்கையும் வைக்கப்பட்டு அதனடிப்படையில் இப்போது இன்வஸ்டிகேஷனில் இருந்து கொண்டிருக்கிறது, ஆகவே, அதையும் இந்த அரசாங்கம் பரிசீலித்து அந்த நகரத்திற்கு குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, எஸ். இராகவானந்தம் : தலைவரவர்களே. புதிய திட்டம் பரிந்துரை செய்யப்பட்டு குடிநீர் வழங்கப்பட வேண்டும் என்று அரசுக்கு வந்தால் அரசு அனுதாபத்தோடு பரிசீலித்து ஆவன செய்யும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்,

சங்கராபுரம் தொகுதியில் குடிநீர் வழங்கும் திட்டங்கள்,

*வினா எண் 111: திரு, துரை முத்துசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) தென்னாற்காடு மாவட்டம், சங்கராபுரம் தொகுதியில் உள்ள மைக்கேல்புரம் பவுஞ்சிப்பட்டு, பொரசப்பட்டு, மூங்கில் துறைப்பட்டு, அருளம்பாடி மூக்கனூர் ஆகிய இடங்களில் குடிநீர்த் திட்டம் செயல்படுத்த அனுமதிக்கப்பட்டுள்ளதா ?

(ஆ) ஆம் எனில் விபரம் என்ன :

மாண்புமிகு திரு, எஸ், இராகவானந்தம்: (அ) & (ஆ) பொரசபட்டு, அருளம்பாடி ஆகிய இரு சிற்றூர்களுக்கு மட்டும் குடிநீர்த் திட்டங்கள் தயாரிக்கப்பட்டு அருளம்பாடித் திட்டம் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருகிறது, பொரசப்பட்டுத் திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது, இதர நான்கு சிற்றூர்களும் நல்ல குடிநீர் ஆதாரமுள்ள சிற்றூர்களானதால் அவைகளுக்குக் குடிநீர் வழங்கும் திட்டம் எதுவும் தற்சமயம் அரசின் பரிசீலனையில் இல்லை.

திரு. துரை முத்துசாமி: பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சரவர்கள் இரண்டு ஊர்களுக்கு மட்டும் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்பட்டு இயங்கி வருவதாகச் சொன்னார்கள். மற்ற ஊர்களுக்கு எப்போது தண்ணீர் கொடுக்கப்படும்? எல்லாக் கிராமங்களுக்கும் குடிநீர் வசதி செய்துகொடுக்கப்படும் என்று அறிவித்தார்களே, இப்போது இந்த மூன்று கிராமங்களுக்கும் குடிநீர் வழங்குவதைப் பற்றிய நிலை என்ன? ஓராண்டுக்கு முன்னதாக சங்கராபுரம் பேரூராட்சிக்கு $8\frac{1}{4}$ இலட்ச ரூபாயில் குடிநீர்த் திட்டம் ஒன்றுக்கான கால்நடு விழா எல்லாம் செய்தார்கள். அது எப்போது முடியும் என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம்: பேரவைத் தலைவர்களே சங்கராபுரத்தைப் பொறுத்தவரையில் தனிக் கேள்வி போடும்படி கேட்டுக்கொள்கிறேன். அடுத்து நீங்கள் குறிப்பிட்ட மூன்று ஊர்களில் மூங்கில் துறைப்பட்டு என்ற இடத்தில் ஆண்டில் 6 மாதகாலம்தான் தண்ணீர் கிடைக்கின்றது என்று தகவல் அரசுக்குக் கிடைத்திருப்பதால் அந்த ஊருக்கு குடிநீர் வழங்குவதைப்பொறுத்தவரையில் அது 6 ஆவது பிரிவில் இருந்து வந்தது. அதை 3 ஆவது பிரிவுக்கு மாற்றி வேலை எடுத்துக்கொள்ளலாம் என்ற பரிந்துரை பரிசீலனையில் உள்ளது.

நாட்டரம்பள்ளி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கல்.

* வினா எண் 112— திரு தி. அன்பழகன்: மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

வடாற்காடு மாவட்டம் நாட்டரம்பள்ளி பேரூராட்சிக்கு குடிநீர் வழங்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

மாண்புமிகு திரு எஸ். இராகவானந்தம்: இல்லை.

திரு தி. அன்பழகன்: தலைவரவர்களே நாட்டரம்பள்ளி பேரூராட்சியைச் சேர்ந்த மக்களின் நீண்ட நாள் கோரிக்கையாக இது இருப்பதாலும் மேலும் திருப்பத்தூருக்கு பாலாற்றிலிருந்து தண்ணீர் கொண்டு செல்லப்படுவதாலும் அதன் அருகாமையிலேயே இந்தப் பேரூராட்சி இருப்பதாலும் அந்தக் குடிதண்ணீரைப் பயன் படுத்துவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன்.